பால் தினகரன் புத்தாண்டு வாழ்த்து

கோவை, ஜன.1: கோவை காருண்யா பல்கலைக்கழகத்தின் டாக்டர்.பால் தினகரன் வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்து அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அன்பான சகோதரரே, சகோதரியே இந்த புத்தாண்டு தேவனுடைய ஆசீர்வாதங்களும் செழிப்பும் நிறைந்ததாக உங்களுக்கு அமையும் என்று விசுவாசிக்கிறேன். சர்வவல்லதேவனாகிய கர்த்தர் எப்போதும் உங்களை பாதுகாத்து சுகமாய் தங்கச்செய்யும்படி ஜெபிக்கிறேன். அன்பானவர்களே நீங்களும் இந்த ஆண்டில் நூறு மடங்கு பலனை அறுவடை செய்வீர்கள். உங்களுக்கு ஆதரவாய் இருக்கும்படி தேவன் உங்கள்மேல் பறப்பார்.

உங்கள் சத்துருக்களிடமிருந்து தப்புவதற்கு வழியை உருவாக்குவார். பொல்லாதவனின் சதியிலிருந்து உங்களை விடுவிப்பார் என்ற வாக்குத்தத்தம் இந்த ஆண்டு நிறைவேறும். ஆகவே, இந்த வாக்குத்தத்தத்தின் மூலம் ஆறுதல் பெறுங்கள். அது நிறைவேறுவதையும் நீங்கள் தேவனுடைய நித்திய கிருபையின் மூலம் வாழ்வில் உயர எழும்புவதையும் காணுங்கள். இந்த புத்தாண்டில் ஆண்டவருடன் உங்கள் பயணம் நம்பக்கூடாத ஆச்சரியங்கள் நிறைந்ததாக அமைவதாக.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் சங்க செயற்குழு கூட்டத்தில்

விஜயகாந்த் மறைவிற்கு இரங்கல்

மேட்டுப்பாளையம் தமிழ் சங்கத்தின் செயற்குழு கூட்டம் தலைவர் தாமோதரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

மேட்டுப்பாளையம், ஜன.1: மேட்டுப்பாளையம் தமிழ்சங்கத்தின் மாதாந்திர செயற்குழு கூட்டம் நேற்று தலைவர் தாமோதரன் தலைமையில் சிடிசி டிப்போ எதிரே உள்ள தமிழ் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

பொது செயலாளர் ரங்கசாமி வரவேற்றார். கூட்டத்தில் தமிழ்சங்க உறுப்பினர்கள் சந்திரகுமார், துரைசாமி, பழனிசாமி உள்ளிட்டோர் மறைவிற்கு இரங்கல் தெரிவிப்பது, முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும், தேமுதிக தலைவருமான விஜயகாந்த் மறைவிற்கு இரங்கல் தெரிவிப்பது, தமிழ்ச்சங்கத்தின் 60வது ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மேட்டுப்பாளையம் தமிழ் சங்க அறக்கட்டளை உறுப்பினர்களும், செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நிறைவாக செயலாளர் விஜயகுமார் நன்றி கூறினார்.

சூலூர் மருத்துவருக்கு

வாழ்நாள் சாதனையாளர் விருது

சூலூரில் நடைபெற்ற விழாவில் டாக்டர்.புருஷோத்தமனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

சூலூர், ஜன.1: சூலூர் அருகே உள்ள அப்பநாய்க்கன்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் டாக்டர் புருஷோத்தமன் (80). இவர் கடந்த 50 வருடங்களாக சுல்தான்பேட்டை பகுதியில் கிளினிக் வைத்து மிக குறைந்த கட்டணத்தில் மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார். நான்கு தலைமுறைகளுக்கும் மேலாக ஒரே கிராமத்தில் இருந்து மருத்துவ சேவை ஆற்றி வரும் இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிய கௌரவிக்கப்பட்டது.

சுல்தான்பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் நடந்த விழாவில் கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பக்தவச்சலம், இந்த விருதை அவருக்கு வழங்கி கௌரவித்தார். நிகழ்ச்சியில் சுல்தான்பேட்டை ஒன்றிய செயலாளர் மகாலிங்கம், முத்துமாணிக்கம், மற்றும் அவை தலைவர் ராஜேந்திரன், சூலூர் எம்எல்ஏ கந்தசாமி, முன்னாள் அமைச்சர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், ரோட்டரி சங்க தலைவர் சுந்தரவடிவேலு உள்ளிட்ட ஏராளமானோர் இந்த விருது வழங்கும் நிகழ்ச்சிகள் கலந்து கொண்டு டாக்டர் புருஷோத்தமனுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து பேசிய டாக்டர் புருஷோத்தமன் தன் வாழ்நாள் முழுவதும் இதே பகுதியில் தங்கி மருத்துவ சேவை புரிவதை தன் னுடைய பாக்கியம் என கருதுவதாக தெரிவித்த தோடு, விருது வழங்கி கௌரவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். இந்த விழாவில் டாக்டர் புருஷோத்தமன் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஊர்பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாட்டுப்புற கலைநிகழ்ச்சி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் தேசிய அளவிலான கேலோ இந்தியா விளையாட்டி போட்டிகள் வரும் 19ம் தேதி கோவையில் நடைபெறுகிறது. இதையொட்டி கோவை ரேஸ்கோர்சில் நேற்று ஒயிலாட்டம், மயிலாட்டம் உள்ளிட்ட நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

டேக்வாண்டோ போட்டி

கோவை மாணவர்கள் மாநில அளவில் 2ம் இடம் பிடித்தனர்

10 தங்கம், 5 வெள்ளி, 9 வெண்கலம் வென்று அசத்தல்

அரக்கோணத்தில் நடைபெற்ற மாநில அளவிலான டேக்வாண்டோ போட்டியில் கோவை மாணவ மாணவிகள் மொத்தம் 10 தங்கம், 5 வெள்ளி மற்றும் 9 வெண்கலம் வென்று மாநில அளவில் 2ம் இடம் பிடித்தனர்.

கோவை, ஜன.1: மாநில அளவிலான டேக்வாண்டோ போட்டி அரக்கோணத்தில் நடைபெற்றது. இதில் தமிழகத்தில் உள்ள பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்றனர். கியோருகி மற்றும் பூம்சே முறையில் நடைபெற்ற இந்த போட்டியில் கோவை மாவட்டம் சார்பாக சாய் டேக்வாண்டோ பயிற்சி பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் பிவி பிரிவில் கிஷோர்கரன் 2 தங்கமும் 1 வெண்கலமும் வென்றார். அஷ்வின் டி.கே 1 தங்கம், 2 வெண்கலப் பதக்கம் வென்றார். நகுல் பி.ஆர் 2 தங்கம், 1 வெள்ளி வென்றார். பாத்திமா 1 வெண்கலம் வென்றார். கேயா பி.ஆர் 1 வெண்கலம், 1 வெள்ளி வென்றார். சப். ஜூனியர் பிரிவில் முகிலன் 2 வெண்கலம், தனிஷ் 1 தங்கம், 1 வெள்ளி, மொகமத் ஷோயத் மற்றும் சாய் தர்ஷன் தலா 1 வெண்கலப் பதக்கம் வென்றனர். கேடட் பிரிவில் ரிஷிகேஷ் 2 தங்கம், விஜய சரஸ்வதி 1 தங்கம், திவ்யஸ்ரீ 1 தங்கம் வென்றனர். சீனியர் பிரிவில் மஹா நதியா மற்றும் சரத் குமார் ஆகியோர் தலா 1 வெள்ளியும் வென்றனர். மொத்தம் 10 தங்கம், 5 வெள்ளி மற்றும் 9 வெண்கலம் வென்ற கோவை வீரர்கள் மாநில அளவில் 2ம் இடம் பிடித்தனர். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை பயிற்சியாளர் சுதர்ஷன் தன் பாராட்டுக்களை தெரிவித்தார். இந்த போட்டியில் தங்கம் வென்றவர்கள் தேசிய அளவிலான டேக்வாண்டோ போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுதானிய விழிப்புணர்வு ஏற்படுத்த

2 ஆயிரம் பேர் யோகா செய்து உலக சாதனை

கோவை, ஜன.1: கோவை மாவட்ட உணவு பாதுகாப்புத்துறையின் சார்பில் சிறுதானியங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் மத்தியில் நன்கு சீரான உணவின் முக்கிய அங்கமாக தினை நுகர்வை ஊக்குவிக்கும் வகையில் "ஈட் ரைட் மில்லட்" என்ற செயல் திட்டம் அமைந்துள்ளது. ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்விற்காக சிறு தானியங்களை தினசரி உணவில் சேர்ப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்நிகழ்வு நோக்கம்.

மேலும், கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, பனிவரகு, குதிரைவாலி, வரகு, சாமை போன்ற சிறுதானியங்களில் புரதம், இரும்பு, வைட்டமின்-பி, நார்ச்சத்து, கால்சியம், பைட்டோகெமிக்கல்கள் சத்துக்கள் நிறைந்துள்ளது.

அவற்றை உட்கொள்வதால் பல்வேறு சுகாதார நலன்கள் ஏற்படுகிறது. இந்நிலையில், ஸ்ரீசக்தி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் குறைந்த நேரத்தில் அதிக ஆசனங்கள் செய்து உலக சாதனை படைக்கும் முயற்சியாக யோகா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், மாணவர்கள், உடற்பயிற்சி ஆர்வலர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் 2,184 மாணவர்கள் கலந்து கொண்டு 67 ஆசனங்களை 16 நிமிடங்கள் மற்றும் 34 வினாடிகளில் செய்தனர். ஒரு ஆசனத்திற்கு 14 நிமிடங்கள் மற்றும் 8 வினாடிகளில் செய்து குறைந்த நேரத்தில் அதிக ஆசனங்கள் செய்து உலக சாதனை படைத்தனர். இந்த குறிப்பிடத்தக்க சாதனை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு "ட்ரையம்ப்" உலக பதிவுகளில் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இந்த முயற்சியில் உணவு பாதுகாப்புத்துறை மற்றும் ஸ்ரீ சக்தி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியும் மன மற்றும் உடல் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் யோகாவின் பங்கை வலியுறுத்துகிறது. இந்நிகழ்வின் ஒரு பகுதியாக, நிபுணர் பயிற்றுநர்கள் தொடர்ந்து பல்வேறு ஆசனங்கள் மூலம் பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டினார்கள்.

நிகழ்ச்சியில் ஸ்ரீ சக்தி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் தலைவர் தங்கவேலு, கல்லூரியின் முதல்வர் ரவிக்குமார், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஹேமலதா, ஷாலினி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

மழை குறைவால்

ஆறுகளில் நீர்வரத்து குறைந்தது

மழைப்பொழிவு குறைந்ததால் வால்பாறை சோலை ஆற்றில் நீர்வரத்து குறைந்து காணப்படுகிறது

வால்பாறை, ஜன.1: வால்பாறை பகுதியில் மழை குறைவால் ஓடைகள் மற்றும் ஆறுகளில் நீர் வரத்து குறைந்து உள்ளதால் அணைகளுக்கு வரும் நீர் வரத்து குறைந்து உள்ளது.

தென் மேற்கு பருவ மழை முடிவுற்ற நிலையில், வடகிழக்கு பருவ மழை வால்பாறை பகுதியில் குறைந்தே பெய்தது. தற்போது வெயில் நீடிக்கிறது. மழையால் தோன்றிய அருவிகள் மற்றும் நீர் ஊற்றுகளில் நீர் வரத்து குறைந்து வருகிறது. எனவே கூழாங்கல் ஆறு, நடுமலை ஆறு, சோலையாறு உள்ளிட்ட ஆறுகளில் நீர் வரத்து குறைந்து காணப்படுகிறது.

வனப்பகுதிகளில் வனவிலங்குகளுக்கு நீர் ஆதாரமாக கட்டப்பட்ட தடுப்பணைகளில் நீர் வடிவதும் குறைந்து உள்ளது. இருப்பினும் சோலை ஆற்றில் நீர் வரத்து உள்ளது. யானைகள் சோலையாறு ஆற்றுப்படுகை வலசை பாதைகளில் வலம் வருவதை வாடிக்கையாக கொண்டு உள்ளது.

சாமளாபுரம் பேரூராட்சியில் புதிய கலையரங்கம் திறப்பு

சோமனூர், ஜன.1: சாமளாபுரம் பேரூராட்சி 11வது வார்டு ரட்சகர் வீதியில் புதிய கலையரங்கம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

சாமளாபுரம் பேரூராட்சியின் 11வது வார்டு கவுன்சிலர் தயாளன் வினோஜ் குமார் தனது சொந்த செலவில் ரூ.2 லட்சம் மதிப்பில் கலையரங்கம் கட்டி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைத்தார். இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

சாமளாபுரம் பேரூராட்சி ரட்சகர் வீதியில் கலையரங்கம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கோவை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் தளபதி முருகேசன் தலைமை வகித்து கலையரங்கத்தை திறந்து வைத்தார். விழாவில் கருமத்தம்பட்டி நகராட்சி தலைவர் நித்யா மனோகரன், சாமளாபுரம் பேரூராட்சி நகர செயலாளர் வேலுச்சாமி, சாமளாபுரம் பேரூராட்சி தலைவர் விநாயகா பழனிச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் ரகு, கோவை மாவட்ட இந்து சமய அறங்காவலர் குழு உறுப்பினர் செந்தில், மாவட்ட வர்த்தக அணை துணை துணை அமைப்பாளர் எழிலரசன், மாவட்ட பிரதிநிதி தங்கராஜ் கவுன்சிலர்கள் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வால்பாறையில் பனிப்பொழிவு

வால்பாறை, ஜன.1: வால்பாறை எஸ்டேட் பகுதிகளில் மாலை நேரங்களில் பனியின் தாக்கம் அதிகரித்து உள்ளது.

எனவே கடும் பனி வால்பாறை பகுதியில் துவங்கியுள்ளது. இவ்வருடம் சென்ற வருடத்தை காட்டிலும் பனியின் தாக்கம் டிசம்பர் முதல் வாரத்திலேயே ஆரம்பித்து விட்டது.

பனிப்பொழிவின் தாக்கத்தில் காலை நேரத்தில் கடும் குளிர் நிலவி உள்ளது. பனிக்காற்று வீசுவதால் வீடுகளுக்கு உள்ளும் பகலில் குளிர் நிலவுகிறது. தொடரும் குளிரால் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ICICI Home Finance | கார்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஐசிஐசிஐ எச்சப்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059, இந்தியா

கினை அலுவலகம்: கடை எண் 102, 103 மற்றும் 115, முதல் தளம், கதவு எண் 483, அசோகா பிளாசா, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்-641018

[விதி 8(6) விதிமுறைக்கான நிபந்தனையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தேரிடம் அடமானம் வைக்கப்பட்டஉரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	கரேஷ்குமார் R (கடன்தாரர்) ஆனந்தவள்ளி காந்தி (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண். LHCBT00001358281 & LHCBT00001358659	Na.Sf No.36 1 74 1 T.S.No.29 75 வார்டு எண்.44, பிளாக் 11, மஜரா சொகம் புதூர், குமாரபாளையம் கிராமம், கோயம்புத்தூர், கோயம்புத்தூர் Sf No.36 1 74 1 கோயம்புத்தூர் தமிழ்நாடு	Rs. 44,55,779/- டிசம்பர் 15, 2023	Rs. 36,39,353/- / Rs. 3,63,940/-	ஜனவரி 08, 2024 11:00 AM- 03:00 PM	ஜனவரி 19, 2024 02:00 PM- 03:00 PM
2.	செந்தில்குமார் (கடன்தாரர்) கலையரசி (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண். LHCBT00001299292 & LHCBT00001299293	மனை எண்.141, கிழக்கு பகுதி, அங்காலம்மன்.ரம், கூடலூர் கிராமம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், பெரியதாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் 756 757 758 கோயம்புத்தூர் -641031	Rs. 21,05,444/- டிசம்பர் 15, 2023	Rs. 17,70,930/- / Rs. 1,77,100/-	ஜனவரி 08, 2024 11:00 AM- 03:00 PM	ஜனவரி 19, 2024 02:00 PM- 03:00 PM
3.	கரேந்திரன் ராமன் (கடன்தாரர்) சரஸ்வதி கரேந்திரன் (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண். LHCBT00001327204	கதவு எண்.43 A, வடமங்கலக்கரை புதூர், காரமடை கிராமம், மேட்டுப்பாளையம் சார் பதிவு அலுவலகம், கோயம்புத்தூர். புதிய sf No.1150/3 பழைய sf.எண்.688/2B1, கோயம்புத்தூர்-641104	Rs. 14,35,463/- டிசம்பர் 15, 2023	Rs. 20,57,895/- / Rs. 2,05,790/-	ஜனவரி 08, 2024 11:00 AM- 03:00 PM	ஜனவரி 19, 2024 02:00 PM- 03:00 PM

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை குளோப் டெக் இணையதளத்தில் (URL Link– https://BestAuctionDeal.com) நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு/ அறிவிப்பு மூலம் ஜனவரி 18, 2024 மாலை 05.00 மணிக்கு முன்பு வரை மொத்த நிலுவைகளை மேற்கொண்டு வட்டியுடன் செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், கடை எண் 102, 103 மற்றும் 115, முதல் தளம், கதவு எண் 483, அசோகா பிளாசா, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்-641018 என்ற இடத்தில் ஜனவரி 18, 2024 மாலை 04.00 மணிக்குள்ளாகவோ அல்லது அதற்கு முன்போ முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் E காண்க) சமர்ப்பிக்க வேண்டும். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) பதிவு படிவம், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் வரையறைகள் படிவம் ஆகியவற்றை ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், கடை எண் 102, 103 மற்றும் 115, முதல் தளம், கதவு எண் 483, அசோகா பிளாசா, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்-641018 இடத்தில் ஜனவரி 18, 2024 மாலை 05.00 மணி அல்லது அதற்கு முன்பு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து கோயம்புத்தூரில் மாற்றத்தக்க வகையில் "ICICI Home Finance Company Ltd.– Auction" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல வித்முறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து கூடுதல் விவரங்களுக்கு, 9920807300 எண்ணில் ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தையோ அல்லது எங்கள் விற்பனை & சந்தைப்படுத்துதல் கூட்டுதார் நெக்ஸ்ஸென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களையோ தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள் : ஜனவரி 01, 2024
இடம் : கோயம்புத்தூர்

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்